# சீன இளைஞர் இயக்கம்

9 - NOV 951
MADRAS



1181
N51
112734

# சீன இளைஞர் இயக்கம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - NOV 1951
MADRAS

எழுதியது
**இளைஞன்**

தமிழகப் பதிப்பகம்,
இராஜபாளையம்.

முதற்பதிப்பு

1951 நவம்பர்

112734

விலை அணா 6

W 81
N51

அச்சிட்டோர்:—

ராஜா பிரிண்டிங் ஒர்க்ஸ்,

இராஜபாளையம்.

# சீன இளைஞர் இயக்கம்

## முகவுரை.

"உலகத்திலுள்ள எல்லா நாடுகளைக் காட்டிலும், அதுதான் — சீனுதான் — அதிக குழப்பம், கேவலமான கொடுங்கோல் ஆட்சி இவைகளுக்கு உட்பட்டிருக்கிறது; மிகப் பரிதபிக்கத்தக்கதாயும், எவ்வித ஆதரவில்லாமலும் இருக்கிறது. சர்வதேசங்களும் ஒன்று சேர்ந்து மிகுந்த நல்லெண்ணத்துடன் உதவி செய்வதாயிருந்தாலும், அதனுடைய உள்நாட்டு நிலைமையை ஒழுங்கு படுத்த முடியாது போலிருக்கிறது. இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்னவென்றால், அது — சீனு — தன்னுடைய விமோசனத்தைப்பற்றிச் சிறிது கூடக் கவலைப்படாமலிருப்பது தான். சீனு ஒரு முதல்தரமான தேசமாவதற்கு கடவுளால் கூட உதவி செய்ய முடியுமோ என்னவோ தெரியாது."

இது பழைய சீனுவின் நமது படப்பிடிப்பல்ல; பிரபல சீனப் பெரியார் லின் — யூ — டாங் தாம் எழுதிய நூலில் வெளியிட்ட மனக் குமுறல்.

பழைய சீனு மறைந்து விட்டது. இன்றைய சீனு; புதிய சீனு. இதுவரை பழமைப் பெருமைக்கு மட்டும் இலக்காகி வந்த சீனம் இன்று புதுமைக்கு எடுத்துக்காட்டாக புரட்சிச் சீனுவாக கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. மக்கள் ஆட்சி இன்று சீனத்தில் ஜனநாயக உச்சத்தை

எட்டிவிட்டது. மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைக் காண்கிறோம். புதிய சக்தி நாடெங்கும் பரவிவருகிறது. வறுமையும் பிணியும் வெருண்டோடுகிறது. அறிவுக்கு ஆக்கம் ஏற்பட்டுவிட்டது பாட்டாளி மக்களின் வாழ்க்கைத்தரம் வளம்பெற ஆரம்பித்து விட்டது. உழைப்பாளர்கள் உயருகிறார்கள். நிலப் பிரபுத்துவத்தின் சவப்பெட்டியில் கடைசி ஆணி அறைந்தாகி விட்டது. முதலாளித்துவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு வருகிறது. ஏகாதிபத்தியங்களின் திருகுதாளங்கள் தவிடு பொடியாகுகிறது. முன்னேறும் சீனத்தின் எதிரொலி வல்லரசுகளை திக்குமுக்காடச் செய்கிறது. சர்வதேச அரங்கில் ஆசியாவின் அந்தஸ்து உயர்ந்து வருகிறதென்றால் அதற்கு இன்றைய சீனம் உருவாகிவரும் வேகமே காரணம். உலகின் எதிர்காலம், இன்று சீனத்தை பொறுத்த பிரச்சனையாகிவிட்டது

கடவுளால் கூட இயலாதோ என்று கைவிடப்பட்ட சீனம், இன்று ஒரு முதல் தரமான நாடாகிவிட்டதென்றால் அதற்கு அங்கு தோன்றிய காளையர் கூட்டத்தின் தீரமிகுந்த தன்னம்பிக்கையும், தளராத முயற்சிகளுமே காரணம். புதுவாழ்வையும் சீரமைப்பையும் சீனத்தில் காண அங்கு இளைஞர் இயக்கம் எவ்வாறு உருவாகி புரட்சிப்பாதையில் முன்னேறிய தென்பதைப் பார்ப்போம்.

# மலர்ந்தது மறுமலர்ச்சி.

சீன இளைஞர் இயக்கத்தை சீனப்புரட்சி வரலாற்றி லிருந்து பிரிக்கமுடியாது. இளைஞர் இயக்கமே புரட்சி; புரட்சியே இளைஞர் இயக்கம். இரண்டறக்கலந்த இவை களின் எழுச்சியே புதிய சீனத்தை உருவாக்கியது. புரட்சி கர சக்தியை பிரகடனப் படுத்தியது.

1919ம் வருடம் மே மாதம் 4ம் தேதி தோன்றிய இளைஞர் எழுச்சியே; புதுவாழ்வுகாண முயன்ற முயற்சி. இந்த முயற்சியின் முதிர்ச்சியே புரட்சி. இதன் பூரணத் தவமே இன்றைய சீனா. அன்று முதல் முப்பது ஆண்டு களாக நெடுக தியாகத்தீயில் நீந்த வேண்டியவர்களானார்கள். புரட்சிப் பாதையில் பல்லாயிரக் கணக்கான காளையர்கள் பலியானார்கள்.

நேச நாடுகளின் சமாதான மகாநாடு 1919ம் வருட ஆரம்பத்தில் கூடியது. வல்லரசுகள் சீனாவை காலைவாரிவிட கச்சை கட்டின. சீனத்தின் உரிமையை பறித்து விடச் சதி செய்தனர்; சமாதான மகாநாட்டின் பெயரால். சீனா ஒன்றும் பிரமாதமான சலுகைகளைக் கேட்கவில்லை. காலனி கள் வேண்டுமென்று கூறவில்லை. நியாயத்திற்காக மன் றுடியது. தனது நாட்டில் அன்னியர் ஆதிக்கம் கூடா தென்று வாதாடியது. மனச்சாட்சியை விற்றுவிட்ட வல் லரசுகள் சீனாவின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுத்து மௌனம் சாதித்தனர். நியாய தேவதை நாணித் தலை கவிழ்ந்தாள். ஜப்பானைத் திருப்தி படுத்துவதும், தங்கள், தங்கள் ஆதிக்கங்களை பலப்படுத்துவதுமே வல்லரசு களின் நோக்கமாக இருந்தது.

இந்தக் காலத்தில்தான் லெனின் தலைமையின் கீழ் பொதுவுடமைக் கொள்கை ருஷியாவில் வெற்றிமுரசு கொட்டியது. இதைக்கண்டு உலகமே பிரமித்துப் போய் நின்றது. இளைஞர் உலகத்தை ருஷியாவின் புதுமை அதி வேகமாக ஆகர்ஷிக்கத் தொடங்கியது. ருஷியாவின் பொது வுடமைத் தத்துவம், புதுஎண்ணம் சீன இளைஞர் சமுதா யத்தின் மீது வெகு வேகமாகப் படிந்து வந்தது. சீனத்தின் கவனம் புது நோக்கை எட்டியது. இளைஞர்கள் மேல்நாடு களின் முன்னேற்றங்களை ஆராயத் தொடங்கினர்கள். ருஷி யாவிற்கும், மற்றும் மேல் நாடுகளுக்கும் இளைஞர்கள் பெருந்தளவில் சென்றுவர ஆரம்பித்தனர். சீனத்தின் தந்தையாக இன்று விளங்கிவரும் மா — சே — துங் 1918ல் "புது மக்களின் சங்கம்" (New People Society) என்று ஒரு ஸ்தாபனத்தை நிறுவியிருந்தார் சீன இளைஞர் கள் மேல் நாட்டுக்கல்வி பெறுவதற்காக 1919ல் மற்றொரு ஸ்தாபனத்தையும் மா — சே — துங் ஏற்படுத்தினர். இந்த ஸ்தாபனத்தின் மூலமாக மேல் நாடு சென்று திரும்பியவர் கள் பிற்காலப் புரட்சியில் பிரதானபங்கு கொண்டு, சீன வாலாற்றையே புதுப்பித்த பெருமையைப் பெற்றுர்கள். இவர்களில் பலர் பெண்கள், இந்த வீராங்கனைகள் இன்று சீனப் பெண்களின் ஒளி விளக்காக விளங்கி வருகிறுர்கள். 1919ல் ஒரு புதிய உணர்ச்சியும், விழிப்பும் சீன இளைஞர் களிடம் புதுமை எண்ணங்களை கிளறி விட்டன.

இந்தக்காலத்தில் சீனுவில் இரண்டு அரசாங்கங்கள் நடைபெற்று வந்தன. ஒன்று பீகிங்கில் இருந்தது. மற்

றென்று காண்டனிலிருந்தது; இதுஜப்பானுக்கு விரோதமாக இயங்கியது. முதலது பிற்போக்கு சக்தியின் புகலிடம்; மற்றது; முற்போக்கு சக்தியின் இருப்பிடம். நல்ல வேளை யாக இரண்டு அரசாங்கமும் இசைந்து சமாதான மகாநாட் டிற்கு ஒரே பிரதிநிதியை அனுப்பிவைத்தன. ஆனால் சமா தான மகாநாட்டில் சீனப்பிரதிநிதியின் வற்புறுத்தலெல்லாம் வியர்த்தமாயிற்று. வல்லரசுகள் தங்கள் பிறவிக்குணத்தை மாற்றிக் கொள்வார்களென்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஓநாய் ஆட்டுக்குட்டிக்கு நியாயம் வழங்க முன்வருமா?

சமாதான மகாநாட்டில் சீனர்களின் கோரிக்கை உதாசீனப் படுத்தப்பட்டது என்று தெரிந்தவுடன் குமுறிக் கொண்டிருந்த சீனர்களின் சினம் கொழுந்துவிட்டுக் கிளம் பியது. இளைஞர் உலகம் சீறி எழுந்தது. எரிமலை வெடித் தது. சீனமெங்கும் வல்லரசுகள்மீது வெறுப்பும், துவேச மும் பெருகியது. மக்களின் மன கொதிப்பை கட்டுக் கோப்பாக உருவாக்கி நாட்டில் ஒரு மறுமலர்ச்சியை உண் டாக்க இளைஞர் கூட்டம் இந்தக் காலத்தில் அதி அற்புதமாக வேலை செய்தது. இதில் மாணவர்கள் எடுத்துக்கொண்ட பங்கு மிகப் பிரமாதமானது. இன்று நம்நாட்டில் மாண வர்கள் அரசியலில் அல்லது பொதுவாழ்வில் ஈடுபடலாகாது என்று உபதேசம் புரிந்து வருபவர்கள் சீனத்தின் "மே" எழுச்சியை சற்று சிந்தனா சக்தியுடன் கவனித்துப்பார்க் கட்டும்.

பீகிங் மைதானத்தில் 1919ல் வருடம் மே மாதம் 4ந்தேதி சர்வ கலாசாலை மாணவர்களின் கூட்டம் பிரமாண் டமாக கூடியது. சமாதான ஒப்பந்தத்தில் சீனா அலட்சியப்

படுத்தப் பட்டதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. சீனவை ஜப்பானின் கைப் பாவை ஆக்க வல்லரசுகள் செய்து வரும் தில்லுமுல்லுகளை தட்டி நொறுக்கி தவிடுபொடியாக்க சீன மக்கள் ஒன்று திரள வேண்டுமென்று அறைகூவினர்கள். இளைஞர்களின் உற்சாகம் கரை புரண்டது. மந்திரிகளின் மாளிகைகளுக்கு ஊர்வலமாகத் திரண்டனர். உணர்ச்சியால் உந்தப்பந்தப் பட்ட இளைஞர் கூட்டம், ஒரு மந்திரியின் மாளிகையை நெருப்புக்கு இறையாக்கிற்று. சில மாளிகைகள் சூறையாடப்பட்டன. ஜப்பானுக்குச் சாதகமாக இருந்த மந்திரி ஒருவர் பலமாக தாக்கப் பட்டார்.

ஆர்பாட்டக் காரர்களில் பலர் கைது செய்யப்பட்டனர். இதை ஆட்சேபித்து நாடெங்கும் ஒரு பரபரப்பு பெரும் ஆத்திரத்துடன் பரவியது. மாணவர்கள் கலாசாலைகளிலிருந்து வெளியே வந்து விட்டார்கள். தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல மறுத்தார்கள். வியாபாரிகள் கடைகளை மூடிவிட்டாகள். ஜப்பானியச் சாமான்கள் பகிஸ்கரிக்கப் பட்டன. ஒரே அமளிகுமளி; சமுதாய வாழ்வு சீர்குலைந்தது. கலக நிலை கனிய ஆரம்பித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ரெயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தார்கள். பீகிங் அரசாங்கம் கல கலத்தது. மந்திரிசபை ராஜினமாச் செய்ய வேண்டிய நிர்பந்தமேற்பட்டது. புதிய மந்திரி சபை பதவி எற்றது. எடுத்த எடுப்பிலேயே புதிய மந்திரி சபை, சமாதான மகாநாட்டிற்குச் சென்றிருந்த பிரதிநிதிகளுக்கு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட வேண்டாம் என்று உத்தி

ரவிட்டது சீனத்தின் தன் மதிப்பு காப்பாற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சி சீன வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாகும். அன்றுமுதல் ஒவ்வொரு மே மாதம் 4ந்தேதியும் சீனத்தில் "இளைஞர் தின" மாக மிகச் சிறந்த முறையில் கொண்டாடப் பட்டு வருகிறது.

சமாதான ஒப்பந்தத்தில் சீனப் பிரதிநிதிகளை கையெழுத் திடத் தடுத்துவிட்டதோடு இளைஞர்கள் திருப்தி அடைந்து விட வில்லை. தங்களது மகத்தான சக்தியை நிரூபிப்பதற்கு வாய்த்த ஒரு சந்தர்ப்பமே என்று கருதினர்கள் மக்களிடம் ஏற்பட்ட விழிப்பையும் புதிய சூழ்நிலையையும் நன்கு பயன் படுத்திக் கொள்ள முன் வந்தார்கள். பாமர மக்களைத் தட்டி எழுப்பி அவர்களை ஒன்று திரட்ட ஆரம்பித்தார்கள் பிண்டமாகக்கிடந்த சீன ஜன சக்தியை ஒரு ஜீவன் நிறைந்த சக்தியாக, துடிதுடிக்கச் செய்ய வேண்டுமென்று கங்கணங் கட்டியது காளையர் கூட்டம்.

சீனச் சமுதாயத்தில் ஒரு புதிய சக்தியை பாய்ச்சும் பணி யில் இளைஞர்கள வெகு மும்மரமாக ஈடுபட ஆரம்பித்தார்கள். புதிய முறையில் கல்வி அறிவு பரவ பெருமுயற்சி எடுக்கப் பட்டது. பொது அறிவை பொது ஜனங்களுக்கு பொதுவான மொழியில் வழங்க முன் வந்தது இளைஞர் இயக்கம். முற் போக்கு வாதிகளின் நூல்களையெல்லாம் மொழிபெயர்த்து நாட் டில் பரவச் செய்தனர். நாடகம், ஓவியம் போன்ற கலைத்துறை களிலும் புதுமை புகுத்தப்பட்டது. புதுப் புதுக் கவிதைகள் மூலம் ஜனங்களுக்கு அறிவையும், உணர்ச்சியையும குழைத்து ஊட்டினார்கள். இலக்கியத்தில் மறுமலர்ச்சி காண முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. 1919ம் வருடத்திய மே எழுச்சி ஒரு மறுமலர்ச்சி இயக்கமாக விரிவடைந்தது. இந்த இயக்கம்

சீனச் சரித்திரத்தில் பிரகாசமிருந்த அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. நெடுந் தூக்கத்திலிருந்த சீன மக்களை விழிப்புறச் செய்தது. சுருக்கமாகக்கூறினால் நாட்டில் ஒரு புதிய ஜீவன் உதயமாயிற்று. சீனப் புரட்சிக்கு 1919ல் ஆரம்பமான மறுமலர்ச்சி இயக்கம் சரியான அஸ்திவாரத்தை அமைத்துத்தந்தது இந்த அடிப்படையின் மீதுதான் புதிய சீனம் உருவாக ஆரம்பித்து இன்றைய நிலையை எட்டியிருக்கிறது.

மறுமலர்ச்சி இயக்கத்தில் மாணவர்களைப்போன்று பெண்களும் சரியான பங்குஎடுத்துக் கொண்டார்கள். யுவதிகள் காட்டிய ஆர்வமும் ஆற்றலும் அற்பசொற்ப மன்று. இன்று "சீன ஜனநாயக பெண்கள் சம்மேளன" த்தின் உபதலைவராக விளங்கிவரும் "டாங்—யிங்—சாவோ" குறிப்பிடத் தகுந்தவர். இவர் இன்று சீனப் பிரதமராக விளங்கிவரும் "சௌ—என்—லாயின்" மனைவியார். 1919ம் வருடம் பள்ளியில் படித்துவரும் பொழுது சீனப் பொதுவாழ்வில் ஈடுபட ஆரம்பித்த இந்தவீராங்கனை இன்றும் ஓய்வு ஒழிவின்றி பாடுபட்டு வருகிறார். இந்த அம்மையாரின் பெயர் இன்று சீனம் முழுவதும் போற்றிப் பாராட்டப் பட்டு வருகிறது.

"டாங்—யிங்—சாவோ" மாணவக் கழகங்களை நாடெங்கிலும் நிறுவபெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். இவள் பள்ளியில் படிக்கும் பொழுதே 1919ல் டைன்ட்ஸ்ன் மாணவ கழகத்தை நிறுவினள். மறுமலர்ச்சி இயக்கத்தின்போது இந்தக் கழகமே சீன மாணவர்களின் நடவடிக்கைகள் முழுவதற்கும் தலைமைதாங்கி வழி காட்டியது. இத்துறையில் "டாங்—யிங்—சாவோ" தீவிரமாகப் பணியாற்றி வரும் பொழுதுதான் சௌ—என்—லாயை சந்தித்துப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது பிறகு வாழ்க்கைத் துணைவர்களானார்கள்.

# பிறந்தது புது சக்தி.

இளைஞர் இயக்கம் ஸ்தாபன ரீதியில் 1920ல் தோற்றுவிக்கப்பட்டது. இது பொதுவுடமைக் கட்சி தோன்றுவதற்கான ஒரு சூழ் நிலையை சிருஷ்டித்தது. லட்சிய பூர்வமான பொதுவுடமைக் கட்சி உருவாகுவதற்கான ஆரம்ப வேலைகளில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. 1921ம் வருடத்தில் பொதுவுடமைக் கட்சி தோன்றியது. பொதுவுடமைக் கட்சியின் முன்னோடியாகவே சீனத்தில் இளைஞா இயக்கம் வளர்ந்து வந்தது 1921ம் வருடத்திற்கு பிறகு "கம்யூனிஸ்ட் இளையஞர் கழகம்" தோற்றுவிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தின் புரட்சிகரமான நடவடிக்கைகள் நாட்டில் ஒரு புது வேகத்தையும் நோக்கத்தையும் உண்டாக்கியது. இளைஞர்களிடம் தோன்றிய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி நாளுக்குநாள் உரம்பெற ஆரம்பித்தது. அன்னிய ஆதிக்கங்களை ஒழித்தக் கட்டினால் ஒழிய சீன மக்கள் தலை நிமிற முடியாதென்ற உண்மையை பொதுமக்கள் உணர்ச்சியுடன் உணரத் தொடங்கினர்கள். இந்த ஒரு பக்குவ நிலையை வெகு திறமையாக உருவாக்கியது இளைஞர் இயக்கம்.

ஷாங்காய் நகரில் ஜப்பானியர்களுக்கு சொந்தமான சில பஞ்சாலையின் தொழிலாளாகள் தங்கள் குறைகளுக்கு பரிகாரம் தேட ஒன்று திரண்டனர். 1925ம் வருடம் மே மாதம் 30ந்தேதியன்று ஆலை முதலாளிகளிடம் தங்கள் கோரிக்கைகளை சமர்ப்புவிக்க ஒரு தூது கோஷ்டி முன் வந்தது. ஆலை மானேஜருக்கு பொறுக்க முடியவில்லை. தனது கைத்துப்பாக்கியால் தூது

கோஷ்டியின் தலைவனை சுட்டுக்கொன்றுன். மற்றவர்களை கைது செய்தான். இந்தக்காட்டு மிராண்டித் தனமான செய்கை தொழிலாளர்களிடம் அளவுக்கு மீறிய ஆத்திரத்தை கிளப்பியது. மண்டிக்கிடந்த மனக்கொதிப்பு கொப்பளித்தது. இளைஞர்களும் மாணவர்களும் ஒன்று திரண்டனர். பிரமாண்டமான ஊர்வலம் கிளம்பியது. "கைது செய்தவர்களை விடுதலை செய்" என்ற கோஷம் வானைப்பிளந்தது. காலையர் கூட்டத்தை கட்டுபபடுத்த முடியவில்லை. அதிகாரவர்க்கம் ஊர்வலத்தை தடுக்க முயன்றது; ஆனுல் தடைப்படுத்த முடியவில்லை. அவ்வளவுதான் ஊர்வலத்தின் மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டது. பலர் மாண்டனர். நூற்றுக்கணக்கான காளைகளுக்கு படுகாயம்.

இந்தப்பயங்கர நிகழ்ச்சி நாடெங்கும் ஒரு கொந்தளிப்பை உண்டாக்கியது, ஒவ்வொரு நகரத்திலும் பிரம்மாண்டமான ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. மாணவர்கள், இளைஞர்கள், தொழிலாளர்கள் விவசாயிகள் எல்லோரும் ஒரே அணியில் ஒன்று திரண்டனர். ஏகாதிபத்தியங்களின் பிடிப்பிலிருந்து என்று சீனு விடுபடுகிறதோ அன்றுதான் சீனமக்கள் சுபிட்சமடைய முடியுமென்றே ஏகோபித்த குரல் சீனுவெங்கும் எதிரொலிக்கத் தொடங்கியது. இன்று சீனுவின் பிரதமராக விளங்கிவரும் புகழ்மிக்க சௌ — என் — லாய் தான் இந்த எழுச்சியின் மூலவர். இந்த எழுச்சி சீனப் புரட்சியின் பயிற்சிக்களமாக அமைந்தது.

1925ம் வருடத் தொடக்கத்தில் கோமிண்டாங் கட்சியில் பொதுவுடமை வாதிகளின் செல்வாக்கு வளர்ந்து வருவதைக் கண்ட தெற்குப் பிரதேசங்களில் உள்ள நிலப்பிரபுக்களுக்கும் வடக்கே உள்ள சில ராணுவப் பிரபுக்களும் கலகக்கொடி தூக்க ஆரம்பித்தார்கள். சமுதாயத்தின் இந்தப் புல்லுருவிகளின்

பல்லைப்பிடுக்க வேண்டியது நாட்டின் முதல் பிரச்சனையாக எழுந்தது. முதன் முதலாக தெற்கு பிரதேசங்களில் கிளம்பிய நிலப்பிரபுக்களை, தன்கீழ் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த ராணுவ இளைஞர்களின் உதவிகொண்டு அடக்கி ஒடுக்கினுன் சியாங்—கே—சேக். இதன் பின்னர்தான் சீன அரசியல் வானில் சியாங்—கே—சேக் தோன்ற ஆரம்பித்தது. பொதுவாக இளைஞர்களும், குறிப்பாக பொதுவுடமை வாதிகளும் சியாங்—கே சேக்கிற்கு பக்கபலமாக இருந்தார்கள். அடுத்தபடியாக வடக்கே உள்ள ராணுவப் பிரபுக்களை ஒடுக்கும் பொறுப்பும் சியாங்—கே—சேக்கிடம் ஒப்படைக்கப்பட்டது. இதை நிறை வேற்றுவதற்காக சியாங்—கே—சேக் தலைமையில் ஒரு ராணுவம் வடக்கு நோக்கி புறப்பட்டது. அப்பொழுது மக்களி டம் தோன்றிய உணர்ச்சி இதற்கு வெகு சாதகமாக அமைந்திருந் தது. ராணுவப் பிரபுக்களையும் நிலப்பிரபுக்களையும் நாட்டின் விரோதிகளாக மக்கள் கருதினுர்கள். இவர்களுக்கு ஒரு முடிவு கட்டினுல் ஒழிய உண்மையில் சீனம் தலை தூக்க முடியாது என்று மக்கள் திட்டவட்டமாக உணரும் தன்மையில் அவர்களிடம் அதி அற்புதமான முறையில் முற்போக்கு இளைஞர்களால் பிரசாரம் செய்யப்பட்டது. இந்தச் சூறுவழிப் பிரசாரம் சீனத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கியதோடுமட்டுமல்ல, பிரபுக்களும் முதலாளி களுக்கும் ஒரு பெரும் கிலியை ஏற்படுத்தியது. பெரும் விரு விருபபுடன் கிளப்பப்பட்ட நிலச்சீர்திருதத இயக்கம் பிரபுக் களைத் திக்குமுக்காடச் செய்தது. இந்த நிலப் பிரபுக்களையும் ராணுவப் பிரபுக்களும் எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட புரட்சி வெற்றி பெறும் கட்டத்தையும் எட்டியது. இந்த சந்தர்ப்பத்தில் பிரபுக் கள் தங்கள் தங்கள் நிலையை காப்பாற்றிக் கொள்ள குறுக்குவழியை கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள். ராணுவ பலத்தைப் பெற்றி

ருந்த சியாங் — கே — சேக்கிற்கு ஆசைகாட்டி வலை விரித்தார்கள். துடிதுடிக்கும் இளைஞர்கள் நிறைந்த பொதுவுடமை வாதிகளை கோமின்டாங் கட்சியிலிருந்து நீக்கிவிட்டு, அக்கட்சியை பிற்போக்கு வாதிகளின் பிண்டமாக மாற்றிவிடச் சதிசெய்தனர். பிரபுக்கள். இவர்களின் சதித்திட்டம் 1927ம் வருடத்தில் முழு உருவத்தையும் பெற்றது.

சீனச் சரித்திரத்தில் 1927 துரோகமும் சுயநலமும் கை கோர்த்து கூத்தாடிய வருடம். ரத்தக்கரை நிறைந்தது; மாசு படிந்தது. இவ்வருடத்திய நிகழ்ச்சிகள் சீன வரலாற்றையே தலை குப்பிற மாற்றிவிடுவதற்கு காரணமாயின. ஏகாதிபத்தியங்களின் பிடிப்பிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காகவும், உள்நாட்டு நிலப் பிரபுக்களின் ஆதிக்கத்தை அழிக்கவும், ராணுவப்பிரபுக்களின் கொட்டத்தை ஒடுக்கவும் 1925ல் ஆரம்பிக்கப்பட்ட புரட்சி 1927ல் ஒரு அபாயகரமான கட்டத்தை அடைந்தது. சீனத்தில் முற்போக்கு சக்தி இருப்பதா அல்லது இறப்பதா என்று முடிவு கட்ட வேண்டிய நிர்பந்தமேற்பட்டது.

புரட்சியை நடத்துவதில் பொதுவுடமை வாதிகளோடு ஒன்றுபட்டு முயன்றதால், ஒத்துழைத்த ஒரே காரணத்தால், சியாங்—கே—சேக் அதிகாரத்திற்கு வர முடிந்தது. ஆனால் புரட்சி வெற்றி பெறும் வேளையில், மக்கள் எழுச்சி பலன் பெறும் தறுவாயில் சியாங்—கே—சேக் தடுமாற ஆரம்பித்தான். மக்களை மறந்தான். முதலாளிகளின் கைக்கூலியாக மாறினான். பிரபுக்களின் பாதுகாவலனாக பல்டியடித்தான். இவர்களின் உதவியைக் கொண்டு ஒரு சர்வாதிகாரியாக முயற்சித்தான. எந்தப்புரட்சியை நடத்த முன் வந்தானோ அதே புரட்சியை தனது கையாலேயே ஒழித்துக் கட்ட முனைந்தான். மக்கள் எழுச்சியை அடக்கி

ஒடுக்கி அழித்துவிட, சியாங்—கே—சேக் கையாண்ட காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளை நினைத்தாலே போதும் நெஞ்சுகுமுறும். ஆயிரமாயிரம் புரட்சிக் காளையர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஏன் என்றுகூட கேட்காமல் சுட்டுக் கொல்லப் பட்டவர்களுக்கோ கணக்கே கிடையாது. தலைகள் பனங்காய்களைப் போன்று தரையில் சிவி எறியப்பட்டன. உயிரோடு எரிக்கப்பட்டார்கள் பலர். மரணதாண்டவம் புரிந்தான். ரத்தவெள்ளத்தில் மிதந்தான் லட்சக்கணக்கான காளையர்களை கொன்று குவித்த அதன்மீது நின்று கொக்கரித்தான். முற்போக்கு இளைஞர்களை பூண்டோடு கருவருக்க கங்கணம் கட்டினான். பொதுவுடமைக் கட்சியில் அங்கம்வகிப்பது மரண தண்டனைக்குரிய குற்றமென்று சியாங்—கே—சேக் பிரகடனப் படுத்தினான். சீன இளைஞர் உலகம் வேதனையும் சோதனையுமிருந்த நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியதாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுவுடமைக் கட்சிக்குள் பூசல் கிளம்பியது கொள்கையில கருத்து வேற்றுமை யேற்பட்டது. சந்தர்ப்பவாதிகள் கொப்பளித்துக் கிளம்பிய மக்கள் எழுச்சியை கட்டுப்படுத்த விரும்பினார்கள். ஆயுதப்புரட்சியை ஆதரிக்க மறுத்ததோடு எதிர்க்கவும் முன் வந்தார்கள். ஜன சக்தியை சிதறடிக்க நினைத்தார்கள். ஆனால் மற்றொரு பிரிவினர் குமுறிக் கொண்டிருந்த மக்கள் எழுச்சியை ஒரு மாபெரும் புரட்சியாக மாற்ற வேண்டுமென்று துடித்தார்கள். இந்த முற்போக்கு கோஷ்டிக்கு மா—சே—துங், சௌ—என்—லாய், சூட்டே, தலைமை தாங்கினர்கள். பிற்போக்கு கும்பல். முழுவதும் முற்போக்கு வாதிகளை ஒழித்துக்கட்டுவதற்காக சியாங—கே—சேக்குடன் ஐக்கியமாயினர். பொதவுடமை வாதிகளை ஒழிப்பதும், மக்கள் எழுச்சியை நசுக்குவதும் இவர்களது ஏகோபித்த குறிலாயிற்று.

இந்தக்காலத்தில் சியாங் — கே — சேக்கின் பேயாட்சியில் சீன முற்போக்கு இளைஞர்கள் கற்பனைக்கும் எட்டாத கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானார்கள். பொதுவுடமை வாதிகள் எதிர்நோக்கிய துன்பமும் துயரமும் அற்பசொற்பமல்ல. எதிரிகளிடம் சிக்கிவிடாமல் பொதுவுடமை வாதிகள் உயிர்தப்பியது அவர்கள் அனுபவித்த அல்லல்களைவிட ஆச்சரியமானது. சந்தர்ப்பவாதிகளின் துரோகம் பொதுடமை வாதிகளை நிலைகுலையச் செய்தது. புரட்சி தடை பட்டது. ஆனால் தோல்வியை வெற்றியின் முதல்படிஎன்று கருதினார்கள் இளைஞர்கள். சளைக்கவில்லை, சோர்ந்துவிடவில்லை வேதனைமிகுந்த தோல்வியின் பாடங்களை எதிர்கால நடவடிக்கைகளுக்கு வாய்த்த மதிப்புமிகுந்த அனுபவமாகக் கருதினார்கள். அசுர அடக்குமுறையும், கோர ஆட்சியும் அவர்களுக்கு அலட்சியமாகப்பட்டது. பிரகாசமிகுந்த எதிர்காலத்தில் தங்கள் கவனத்தை திருப்ப ஆரம்பித்தார்கள். சந்தர்ப்பவாதத் தலைவர்களை தூக்கிஎறிந்துவிட்டு "மா — சே — துங்" தலைமையில் சீனப் பொதுவுடமைக்கட்சி புத்துயிர்பெற்றது. புரட்சிக்கொடியை உயர்த்தியே தீருவோம் என்று போர்முழக்கம் செய்ய ஆரம்பித்தார்கள் ஆயிரக்கணக்கான இளைஞர்கள்.

# புரட்சி எழுந்தது.

"மா — சே — துங்" ஆயுதப்புரட்சியை பலமாக ஆதரித்து வந்தார். ஆயுதப்புரட்சியை கைவிட்டால் சீனம் இனி என்றுமே தலைதூக்க முடியாதென்று திட்டவட்டமாக எவரும் மறுக்க முடியாதபடி எச்சரித்தார். இந்த எச்சரிக்கையை எதிர்காலம் உறுதிப்படுத்தியது; உண்மையாக்கியது. இதன் பின்தான் மா — சே துங்கின் மேதை மிகுந்த தீர்க்கதரிசனத்தை உலகம் உணர்ந்தது. அன்று "மா — சே — துங்" கின் திசைவழி தவிர்க்கப்பட்டிருந்தால் இன்றையச் சீனாவை நிச்சயமாகப் பார்த்திருக்க முடியாது. மா — சே — துங் அன்று சீன மக்களுக்கு விடுத்த எச்சரிக்கையின் எதிரொலியே சீனச் செஞ்சேனையாக பரிமாணித்தது. "சியாங் — கே — சேக்" கின் பேயாட்சியை எதிர்த்து 1927 ஆகஸ்ட் முதல்நாளன்று "நான்சாங்" கிலிருந்த ராணுவம் கலகக்கொடி தூக்கியது. யெட்டிங் (Keh-Ting) ஹோலுங் (Ho Lung) தலைமை தாங்கினார்கள். "சூட்டே" ஆலோசகராக விளங்கினார். முப்பதினாயிரம் ராணுவ இளைஞர்கள் சீனப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையில் அணிவகுத்தனர். இவர்களே சீனச் செஞ்சேனையின் மூலவர்கள், முதல்வர்கள். மக்கள் ஆயுதமேந்தி போராட ஆரம்பித்துவிட்டார்கள். என்பதை நான் சாங் எழுச்சி பிரகடனப்படுத்தியது. நாட்டில் பல்வேறு இடங்களில் ஆயுதப்புரட்சி ஆரம்பமாவதற்கு நான்சாங் எழுச்சி வழிகாட்டியது. சீனப் புரட்சி புதுவேகத்தைப் பெற்றது. தெற்கு "ஹோப்பா" விலுள்ள விவசாயிகள் புரட்சிக் கொடி உயர்த்தினர். "ஹ்யூனன்" மாகாணத்திலும் விவ

சாயிகளின் புரட்சி ஆரம்பமாகியது. இந்தப் புரட்சிகர நடவடிக்கைகளை யெல்லாம் தீரமிகுந்த இளைஞர்கள் முன் னின்று நடத்திவந்தார்கள். ஆயுதமேந்திய போராட்டங்கள், நான்சாங் எழுச்சியை தொடர்ந்து நாடெங்கிலும் பரவியது. பல பட்டினங்களும், முக்கிய இடங்களும் புரட்சிக்காரர்கள் வசமாயிற்று... நான்சாங் எழுச்சியில் ஈடுபட்ட ராணுவ இளைஞர்கள் செஞ்சேனையின் முதுகெலும்பாக விளங்கினர் கள். இவர்களுடன் பொதுவுடமைப் புரட்சிக்காரர்கள் ஒன்றுபட்டு ஐக்கிய அணி அமைத்து பொதுஜன எழுச்சிக்கு புத்துயிர் கொடுத்தது. புரட்சி ராணுவத்துடன், தேசிய புரட்சிக்காரர்களை இணைத்த பெருமை மா–சே–துங்கையே சாரும். இந்த தீர்க்கதிருஷ்ட்டியின் விளைவாக சீனப்புரட்சி ஒரு புதிய திருப்பத்தை எட்டியது. விரோதிகளின் சதி முறியடிக்கப்பட்டது. சீன மக்களின் பரிபூரண ஒத்துழைப் பையும் நம்பிக்கையும்கொண்ட செஞ்சேனை உருவாகுவற்கு மா—சே—துங் தனது மேதை மிகுந்த திட்டங்களின் மூலம் அசைக்கமுடியாத அஸ்திவாரத்தை வெற்றிகரமாக அமைத்தார் உயிருக்காக மன்றாடிவந்த சீனப் பொது வுடமை வாதிகள் இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு பலம் பொருந் திய ராணுவத்தை தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவந்தது ஒரு அசாதாரணமான சாதனையாகும். எந்தப் பொதுவுடமை வாதிகளை ஒழித்துக்கட்ட சியாங்—கே—சேக் கருதி வந்தானோ அதே பொதுவுடமை வாதிகள் பலம் பொருந்தி யது மட்டுமல்ல, உணர்ச்சிமிகுந்த ஒரு பெரும் ராணுவபலத் துடன் புரட்சிக்கொடியை வெற்றிகரமாகப் பறக்க விட்டார் கள். போட்டி அரசாங்கத்தை அமைத்தார்கள். 1931ம் வருடம் "கியாங்க்ஸி" மாகாணத்தில் பொதுவுடமைக்

கட்சியனரது அரசாங்கம் நிறுவப்பட்டது. இவர்களது நிர்வாகஆதிக்கத்தில் பத்தொன்பது ஜில்லாக்கள் உட்பட்டன "ஜுயிசின்" பொதுவுடமை அரசாங்கத்தின் தலைநகராயிற்று. சீன சோவியத் குடியரசு உதயமாயிற்று. சீனப் புரட்சி முதல் கட்டத்தில் இவ்வளவு தூரம் வெற்றிபெற்றதற்கு முக்கியமான காரணம் சீன இளைஞர்கள்தாம். அவர்கள் புரிந்த தியாகமும், ஆற்றியபணியும், அவர்களிடம் காணப்பட்ட நாட்டுப் பற்றும், தேசத்திற்காக எது வேண்டும்? உடமை வேண்டுமா? உடல் வெண்டுமா? உயிர் வேண்டுமா? வேண்டுமேல் அனைத்தையும் ஒருங்கே தரத்தயார் என்று சர்வபரித்தியாகம் செய்ய போட்டியிட்டு முன் வந்த உணர்ச்சியும் உண்மையில் பிரமிக்கத்தகுந்த நிகழ்ச்சிகளாகும். தியாகி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை வரையறுத்தவர்கள் சீன இளைஞர்கள். இன்று தியாகிகள் என்று கூறிக்கொள்பவர்கள் சீன இளைஞர்களின் தியாகத்தை சற்று சிந்தித்துப்பார்க்கட்டும் சீன இளைஞர்கள் தியாகத்தின் சின்னங்கள் சுயநலம் தேடாத தியாகப் பிழம்புகள். தன் வாழ்வை நாட்டு நலனுக்காக பலியிட்ட பண்பாளர்கள். சீன இளைஞர்களிடம் காணப்பட்ட தியாக புத்தியைக்கண்டு உலகமே பிரமித்தது. சீன இளைஞர்களிடம் காணப்பட்ட தியாகமும் ஆற்றலும் தான் புரட்சியில் வெற்றிகாணச்செய்தது. சியாங் — கே — சேக்கின் பேயாட்சிக்கு முடிவுகட்டியது "சீனப் புரட்சியில் இளைஞர்கள் பங்கு என்னவென்று கேட்டால், புரட்சியில் ஒவ்வொரு கட்டத்திலும் பிரதானபங்கு கொண்டு புரட்சியின் முன்னணி வீரர்களாக இளைஞர்கள் விளங்கியிருக்கிறார்கள்" மா — சே — துங் பெருமிதத்துடன் கூறிய இப்புகழுரை முற்றிலும் பொருத்தமானதாகும்.

# யார் விரோதி

பொதுவுடமை அரசாங்கத்தை அதுவும் தனது போட்டி ஆதிக்கத்தை சியாங் — கே — சேக் பார்த்துக் கொண்டு இருப்பானா? தமது முழுவலிமையும் பிரயோகித்தான். பக்கத்துணைக்கு ஒரு ஜெர்மன் ஆலோசகரை வேறு வைத்துக்கொண்டான். கியாங்க்ஸி மாகாணத்தின் மீது ஆறு முறை படையெடுத்தான். தானே தலைமை தாங்கினான். ஆறு லட்சம் துருப்புகளை பயன்படுத்தியும், பல நவீன சாதனங்களை உபயோகித்தும் பொதுஉடமை வாதிகளின் தளத்தைக்கூட நெருங்க முடியவில்லை. பொதுவுடமைவாதிகளின் கொரில்லாப் போர் முறைகளுக்குமுன் சியாங் — கே — சேக்கின் கெடுபிடிகள் செல்லுபடி யாகவில்லை. கடைசியில் 1934ல் கியாங்க்ஸி மாகாணத்தையே சுற்றி வளைத்து முற்றுகையிடப்பட்டது. பட்டினிபோட்டு சரணடையச் செய்யச் சதிசெய்தான் சியாங் — கே — சேக். இந்த மனிதக்கோட்டையும் சரிந்தது. பொதுவுடமை வாதிகள் சரணடையவுமில்லை. அகப்பட்டுக் கொள்ளவுமில்லை. 1934ம் வருடம் அப்படியே தப்பிவிட்டார்கள் பொதுவுடமை வாதிகள்

கியாங்க்ஸி மாகாணத்திருந்து வெளியேறி பொதுவுடமை வாதிகள் கால்நடையாகவே ஒரு வருடம் நடந்து 8000 மைல்களைத் தாண்டி, "ஷென்சி" மாகாணத்தில் "யேனன்" என்னும் ஊரில் தங்கள் புதியதளத்தை அமைத்தார்கள். ஒரு வருடத்திற்குபின் பொதுவுடமை அரசாங்கம் மறுபடியும் ஆரம்பமாகியது. இந்நிகழ்ச்சி அற்புதமானது; கற்பனைக்கும் எட்டாதது. உலக சரித்திரத்தில் வேறு

எங்கும் கண்டும் கேட்டிருக்க முடியாதது. பொதுவுடமை வாதிகள் கால்நடையாக நெடுந்தூரப் பிரயாணத்தை துவக்கினார்கள் என்றால் ஏதோ மனமுடைந்த ஒரு மனிதக்கூட்டம் சென்றதாகக் கருதிவிடக்கூடாது. லட்சக்கணக்கான தியாகிகள் அடங்கிய ஜன சமுதாயமே திரண்டு சென்றது. வழி நெடுக இளைஞர்கள் அற்புதமானமுறையில் தீவிரப்பிரசாரம் செய்துகொண்டே போனார்கள். இப்பிரசாரம் பொதுவுடமை வாதிகளுக்கு பெரிய பலனைக்கொடுத்தது. இத்த நெடுந்தூர பிரயாண வரலாற்றை ஒரு தனி சரித்திரமாகவே எழுதலாம். அப்படி எழுதும்போது அந்தச் சரித்திரம் தியாகிகளின் சரித்திரமாகவே இருக்கும். சீன உள்நாட்டு நிலையை உன்னிப்பாய் கவனித்துவந்த ஜப்பான் இந்தச் சந்தர்ப்பத்தில் சீனாவை ஆக்கிரமித்துக்கொள்ள மிகத்தீவிரமாக முனைந்தது.

ஏகாதிபத்திய வாதிகள் சந்தர்ப்பத்திற்காக காத்துக்கொண்டிருப்பதில்லை. சந்தர்ப்பத்தை தேடிக்கொண்டு செல்வார்கள். "முக்டேன்" சம்பவம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. 1931ம் வருடம் செப்டம்பர் மாதம் சீனாவை ஆக்கிரமிக்கும் கருத்துடன் "முக்டேன்" நகரத்தை ஒரேநாளில் கைப்பற்றியது ஜப்பான். இந்தசம்பவம் சீன மக்களுக்கு ஒரு அதிர்ச்சியை உண்டாக்கியது. ஜப்பானின் ஆசையை வளரவிடாமல் மட்டம்தட்ட உடனே எதிர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மக்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் கோமிண்டாங் ஆட்சியோ வல்லரசுகளிடம் நம்பிக்கை வைத்தது. அவர்கள் நியாயம் வழங்குவார்களென்று எதிர்பார்த்தது. வல்லரசுகளோ வழக்கம்போல் வளைந்து நெளிந்து வருடக்கணக்காக வழ வழா வென்று வீண்விவாதம்

புரிந்து காலத்தைக்கடத்தி வந்தனரே தவிர ஆக்கிரமிப்பை தடுக்க முன்வரவில்லை. இந்தசூழ்நிலை வடசீனுவில் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள ஜப்பானுக்கு வசதியாயிற்று. ஜப்பானின் ஒவ்வொரு நடவடிக்கையும் சீனுவை கபளிகரம் செய்யும் முன்ஏற்பாடாகவே இருந்தது. தன்னை "சீனுவின் ரக்ஷகன்" என்று தம்பட்டமடித்தது. "ஆசியாவின் எஜமான்" என்று இறுமாப்புடன் உறுமியது..

இந்த அபாயகரமான வேளையில்கூட கோமிண்டாங் அரசாங்கம் தனது பரம்பரைக் குணத்தைவிடவில்லை ஒன்று பட்ட பலத்தின்மூலம் பொது எதிரியை ஒழித்துக்கட்ட முன்வரவில்லை. வடசீனுவை ஜப்பானுக்கு அடகுவைக்கவும் துணிந்தது, "ஹோப்பை" "சாஹார்" மாகாணங் களிலிருந்த சைனியங்களை வாபசாகும்படி உத்திரவிட்டது. அதேசைனியங்களுக்கு பொதுவுடமை வாதிகளை ஒழித்துக் கட்ட ஆக்ஞையிட்டது. இந்தப்போக்கைக்கண்டு மக்களின் ஆத்திரம் அத்துமீறியது; கொதிப்புகொப்பளித்தது. எல்லா தேசிய சக்திகளையும் ஒன்றுதிரட்டி பொது எதிரியை முறி யடிக்க வேண்டுமென்ற கோரிக்கை சீன மக்களிடம் நாளுக்கு நாள் வலுக்க ஆரம்பித்தது. வளர்ந்துகொடுத்து வந்த நான்கிங் அரசாங்கத்தை தூக்கிஎறியவும் துடித்தனர். இந்தளவிற்கு மக்களை ஒன்றுதிரட்டி உணர்ச்சிபெறச் செய்தது சீன முற்போக்கு இளைஞர்கள்தான். முயற்சியில் வெற்றியும் பெற்றனர். ஜனசக்தி ஜீவன் பெற்றது.

சியாங் — கே — சேக்கிற்கு பக்கபலமாக இருந்து வந்த "வாங் — சிங் — வேய்" 1935ம் வருடம் நவம்பர் மாதம் துப்பாக்கி பிரயோகத்திற்கு ஆளானுன். இவன் ஜப்பானுக்கு தலையாட்டிக்கொண்டு நான்கிங் அரசாங்கத்தின்

பிரதமராக விளங்கிவந்தான். இவனுக்குப்பிறகு பிரதமர் பதவியை "சியாங் — கே — சேக்" ஏற்றுக்கொண்டான். இதற்குப்பிறகும் கோமிண்டாங் ஆட்சி மக்களின் சக்தியை நசுக்கத்தான் முற்பட்டதே ஒழிய எதிரியை முறியடிக்க முன்வரவில்லை. அரசு அடக்குமுறை வளர்ந்துகொண்டே வந்தது. கொடுமையும் கொடூரமும் தலைவிரித்தாடியது. ஜப்பானிய ஆக்கிரமிப்பை ஆரம்பமுதலே கட்டுப்பாடாக எதிர்த்துவந்த பொதுவுடமை வாதிகளையும், முற்போக்கு இளைஞர்களையும் பூண்டோடு ஒழித்துக்கட்டுவதே தனது கடமையெனக் கருதினன் ' சியாங் — கே — சேக்". இந்தக் கர்ண கொடூரமான காலத்திலும் இளைஞர் இயக்கம் ஆச்சரியப்படத்தக்க அளவில் வேலைசெய்தது. கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்பாட்டங்கள் நாடெங்கிலும் நடத்தப்பட்டன. உயிரைத்திரணமாக மதித்து இளைஞர்கூட்டம் அதி உற்சாகத்துடன் மக்களிடம் மின்னல்வேகத்தில் பிரசாரம் செய்துவந்தனர். இதற்காககிடைத்த கோமிண்டாங் ஆட்சியின் பரிசுகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். எந்த ஒரு அடக்குமுறையும் இளைஞர்களின் உணர்ச்சியை தடைபடுத்த முடியவில்லை. முன்னிலும் மும்மரமாகவே முனைந்துநின்றனர். இளைஞர்களின்ஈடில்லாத இந்தஉழைப்பு சீன மக்களிடம் ஜப்பானிய எதிர்ப்புணர்ச்சியை கரைபுரளச் செய்தது. இந்தநிலையிலும் கோமிண்டாங்ஆட்சி ஜப்பானிய அபாயத்தை உணர்ந்துகொள்ளாமல் காட்டுதர்பார் நடத்தி வந்தது உண்மையில் விசித்திரமானதேயாகும். சியாங் — கே — சேக்கின் கும்பலுக்கு பொதுவுடமை வாதிகளும், இளைஞர்களுமே நாட்டின் விரோதிகளாகப்பட்டது. ஆனல் நல்லவேளையாக மக்கள்இதற்கு அனுமதிக்கவில்லை.

ஜப்பானியர்களே, தங்கள் விரோதிகள். அவர்களைவிரட்டி ஓட்டுவதே நாட்டின் உடனடிவேலை என்பதை மக்கள் திட்டவட்டமாக, தெளிவாக உணர்ந்தார்கள். இந்ததிடமான முடிவிற்கு மக்களை உருவாக்கிய பெருமை இளைஞர்களையே சாரும். குமிறிக்கிளம்பிவந்த மக்களின் உணர்ச்சி கோமிண்டாங் கூட்டத்தாரை கிலி கொள்ளச்செய்யும் அளவிற்கு உரம்பெற்று வளர்ந்தது.

# விசித்திர ஒற்றுமை.

1935-ம் வருடம் டிசம்பர் மாதம் 9ம்தேதி; காலை நேரம். ஆயிரக்கணக்கான பீகிங் இளைஞர்கள் பிரமாண்டமான ஊர்வலமாகக் கிளம்பினுர்கள். ஆயுதந்தாங்கிய போலீஸ் படை தடுத்து நிறுத்த முயன்றது. முடியவில்லை. இளைஞர் கூட்டம் திட்டப்படி மைதானத்தை அடைந்தது. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் இவைகளுக்கு உத்திரமாதம் கோரினுர்கள். சீனுவின் எல்லைக்கு பாதுகாப்புத்தேவை என்று ஆர்பரித்தார்கள். எதிரியின் முதுகெலும்பை முறிக்க வேண்டுமென்று அறை கூவினுர்கள். பனிக்கட்டி உரைந்த பீகிங் நகரத்து தெருவழியாக ஊர்வலம் திரும்பி வந்துகொண்டிருந்தது. "கொள்ளைக்காரர்கள் ஒழிக" "ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஒழிக" "வட சீனுவைக் காப்போம்" என்ற கோஷங்கள் பீகிங் நகரத்தையே கிடுகிடுக்கச்செய்தது. ஊர் வலத்தைக் கலைக்க ராணுவ உதவி நாடப்பட்டது. அவ்வளவுதான் வெண்ணிறமாக விளங்கிய தெருவெல்லாம் ரத்தாறு ஓடியது.

நெஞ்சு குமுறும் இந்த நிகழ்ச்சி ஒரு பொதுஜன எழுச்சியாக மாறியது. "ஹாங் கோ" "காண்டன்" "நான்கிங்" "ஷாங்காய்" போன்ற பல இடங்களில் இளைஞர்கள் பெரிய பெரிய ஆர்பாட்டங்கள் நடத்த ஆரம்பித்தனர். துடி துடிக்கும் இளைஞர்களின் உணர்ச்சியை துப்பாக்கி பிரயோகங்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. இதற்கு மாருக இளைஞர்களின் புரட்சிகரமான நடவடிக்

கைகள் பெருகிக்கொண்டே வந்தது. இதுவரை நகரங்களில் மட்டும் வேலை செய்து வந்த இளைஞர் இயக்கம் இப்பொழுது கிராமாந்தரங்களிலும் வெகு வேகமாக பரவ ஆரம்பித்தது. தொழிலாளர்கள், விவசாயிகள் இவர்களிடம் ஜப்பானிய எதிர்ப்புணர்ச்சி கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. இந்த உணர்ச்சிகளை எல்லாம் ஒரு முகப்படுத்தி ஜனசக்தியை ஒன்று திரட்டும் வேலையில் வெகு மும்மரமாக ஈடுபட்டுவந்தது இளைஞர் இயக்கம். ஜப்பானை எதிர்த்து விரட்டி ஓட்ட சீனத்தில் "ஐக்கிய முன்னணி" உடனடியாக உருவாக வேண்டுமென்ற ஒரு புது உணர்ச்சி மின்னல் வேகத்தில் பக்களிடம் பரவ ஆரம்பித்தது.

முற்போக்கு இளைஞர்கள் "தேசீய விடுதலை முன்னணிப்படை" (National Liberation Vangaurds) ஒன்றை நிறுவினர்கள். பொதுவுடமைக்கட்சி இதற்கு தலைமை தாங்கியது. இதனுடன் "தேசிய விடுதலை இளைஞர் கழகமும்" (National Salvation Youth Association) சேர்ந்துகொண்டது. இந்த இருஸ்தாபனங்ளின் சலியாத உழைப்பினுல், விடாமுயற்சியால், 1936ம் வருடம் மே மாதம் "அகில சீன சர்வகட்சி ஐக்கிய தேசீய விடுதலை கழகமும்" (All China Uuited Association of All Circles for National Salvation) ஸ்தாபிதமாயிற்று. உள்நாட்டுச் சண்டையை நிறுத்தி பொது எதிரியுடன் போராட வேண்டுமென்பதே இதனுடைய நோக்கம் டிசம்பர் 9 தேதியஎழுச்சி ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு அடித்த சாவுமணியாகும்.

ஐக்கிய முன்னணியின் அவசியம் நாடெங்கிலும் பலமாக வற்புறுத்தப்பட்டு வந்த இக்காலத்தில் சீனுவை

அதிர்ச்சியுறச் செய்யும் ஒரு சம்பவம் நிகழ்ந்து. 1936ம் வருடம் டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் "சியாங் — கே — சேக்" பொதுவுடமை வாதிகளின் கைதியானான். பொதுவுமை வாதிகள் விரும்பியிருந்தால், சியாங் — கே — சேக்கை என்னவேண்டுமானாலும் அப்பொழுது செய்திருக்க முடியும். ஆனால் அரசியலில் அதி மேதைகளான பொதுவுடமை வாதிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் உலக வரவேறு எங்கும் எப்பொழுதும் கண்டிருக்கமுடியாத வண்ணம் நடந்துகொண்டார்கள். சியாங் — கே — சேக்கை ஒழித்துக்கட்டுவதல்ல அவர்களது லட்சியம். சீனத்தின் நல்வாழ்வே அவர்களது குறிக்கோள். அப்போதைய நிலையில் சியாங் — கே — சேக்கிற்கு சிறைவாசமோ அல்லது தூக்கு தண்டனையோ விதித்தால் நாட்டில் குழப்பம் மேலும் அதிகமாகலாம்; எதிரிபலமடையலாம் என்று கருதத்தொடங்கினார்கள் பொதுஉடமை வாதிகள். ஜப்பானை எதிர்த்து சியாங் — கே — சேக் முழுமூச்சுடன் போராடவேண்டும் என்ற ஒரேநிபந்தனைக்கு உத்திரவாதம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் விடுதலை செய்தனர். தாங்களும் ஜப்பானியர்களை எதிர்க்க சியாங் — கே — சேக்குடன் ஒத்துழைக்க தயார் என்று அறிவித்தார்கள் பொதுஉடமை வாதிகள். பொதுஉடமை வாதிகள் சியாங் — கே — சேக்கை விடுதலை செய்தது, நாட்டில் அவர்களது மதிப்பை என்றுமே இல்லாதளவிற்கு உயர்த்தியது. பொதுவுடமை வாதிகளே உண்மை தேசாபிமானம் கொண்டவர்கள் என்ற உணர்ச்சி நாட்டில் காட்டுத்தீபோல் பரவத்தொடங்கியது. சியாங் — கே — சேக். உடனடியாக பொதுஉடமை வாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்ற குரல் நாடெங்கிலும் எதிரொலிக்கத்



112734

தொடங்கியது. பொதுவுடமை வாதிகளின் செல்வாக்கு நாட்டில் உச்சநிலையில் நிலவ ஆரம்பித்தது. 1936ம் வருடக்கடைசியில் இளைஞர் இயக்கம் வற்புறுத்தி வந்த "ஐக்கிய தேசீய முன்னனி" உருவாகியது. ஜப்பானியர் களை எதிர்த்துப் போராட பொதுஉடமை வாதிகளுடன் ஒத்துழைக்க சியாங்—கே—சேக் கடைசியாக ஒப்புக் கொண்டான் என்று கூறுவதை விட மக்களின் நிர்ப்பந்தத் தை தவிர்க்க முடியவில்லை என்று கூறுவதே பொருத்த மாகும். எந்த ஒரு ஆட்சி தங்களை பூண்டோடு ஒழிக்க முயன்றுவந்ததோ அந்தஆட்சியின் அதிகாரத்திற்குட்பட்டு பொதுஉடமை வாதிகள் தங்கள் முழுபலத்துடன் பொது எதிரியை முறியடிக்க முன்வந்தார்கள். நாட்டின் நலனில் உண்மையில் அக்கரை கொண்டுள்ளவர்களுக்கு சீனப் பொதுஉடமை வாதிகள் சிறந்த வழிகாட்டியாவார்கள். சியாங்—கே—சேக்கிற்கும் பொதுஉடமை வாதிகளுக்கும் ஏற்பட்ட விசித்திர அகில உலக அரசியல் வாதிகளையும் திகைக்கடித்தது. திக்குமுக்காடச் செய்தது. பொதுஉடமை வாதிகளின் இந்தப் புதுவிதமான போக்கு பாராட்டுதல் களையும் பெற்றது. ஆனல் அதேசமயத்தில் கடும் கண்ட னத்தையும் பெற்றது. அன்று சீனப் பொதுஉடமை வாதி கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையே சரியான அரசியல் முறைஎன்பதை எதிர்காலம் நிரூபித்து விட்டது. அசிரயல் என்பது ஒரு வேதாந்த சித்தாந்தமல்ல, அல்லது கடவுள் கொள்கையல்ல என்றும்போல் ஒரே பல்லவியைப்பாட. காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அரசியல் கொள்கைகள் மாறுபட்டால்தான் லட்சியம் சித்தியாக முடியும். எந்த ஒரு சூழ்நிலையிலும் கொள்கைகளையும், திட்டங்களையும் காலத் திற்கேற்ப மாற்றிக்கொண்டு முன்னேறவிரும்பாத அரசியல் கட்சிகளை, பஜனைக்கோஷ்டிகள் என்றே கூறவேண்டும்.

# முன்னணியின் முன்னேற்றம்

சீன மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஐக்கிய முன்னணி, "ஜாம்" "ஜாம்" என முன்னேறத் தொடங்கியது. மக்களின் புது விழிப்பு பிற்போக்கு வாதிகளுக்குப் பெரும் கிலியை உண்டாக்காமல் போகவில்லை சியாங்—கே—சேக்; ஜப்பானிய எதிர்ப்பை பெயரளவில்தான் நடத்தி வந்தான் என்று கூறுவது குற்றமாகாது. பிரபுக்களும் முதலாளிகளும் பொதுஉடமை வாதிகளின் செல்வாக்கு வளருகின்றதே என்ற வயிற்றெரிச்சலில் ஜப்பானியர்களுக்கு மறைமுகமாக வரவேற்பளித்து வந்தார்கள். இவர்களின் பிரதிபலிப்பாக சியாங் — கே — சேக் தீவிரமான நடவடிக்கையில் இறங்கத்தயக்கம் காட்டிவந்தான். ஜப்பானிய போர்முனைகளில் தமது துருப்புகளை ஈடுபடுத்தாமல், நவீன தளவாடங்களும், சாதனங்களுமில்லாத பொதுஉடமைத் துருப்புகளை ஏவினான். இதனால் லட்சக்கணக்கான ராணுவ இளைஞர்கள் உயிர் துறந்தார்கள். ஆனால் பொது உடமை வாதிகளோ என்னவிலை கொடுத்தேனும், எத்தகைய தியாகம் செய்தாவது ஜப்பானிய ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதென்ற திடசங்கல்பத்துடன் கொஞ்சமும் சளைக்காமல் எதிரிகளை எதிர்த்துப் போரிட்டு வந்தார்கள். பொது உடமைத் துருப்புகளுக்கு சீன இளைஞர்கள் பக்கபலமாக இருந்தார்கள்.

இளைஞர்களின் ஸ்தாபனமாகிய "தேசீய விடுதலை முன்னனிப் படையினர்:" சீனச் சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றவர்கள். போர்க்களத்தில் இவர்கள் காட்டிய வீரமும், கொரில்லா நடவடிக்கைகளில் இவர்கள்

புரிந்த தியாகச்செயல்களும் இளைஞர் இயக்க வரலாற்றில் மங்காதபுகழும் மறையாதபெருமையும் கொண்டவை. சீனச் செஞ்சேனைக்கு இளைஞர் இயக்கம் புரிந்த உதவிக்கு உலக வரலாற்றிலேயே உவமைகிடையாது. ஜப்பானியர்களை எதிர்க்க எத்தகைய தியாகமும் செய்ய ஒவ்வொரு சீன மகனையும் தயாராக்கி வந்தார்கள் இளைஞர்கள்.

கிராமாந்தரங்களில் "மக்கள்படை" யை தற்காப்புக்காக தோற்றுவித்தார்கள். கொரில்லா போர்முறையை அற்புதமாக அனுஷ்டிக்கும் அளவிற்கு பயிற்சி கொடுத்தார்கள். இளைஞர் இயக்கம் அழிவுவேலையில் மட்டும ஈடுபடவில்லை ஆக்கவேலையிலும் திறம்பட விளங்கியது. ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட இடங்களில் கொரில்லா நடவடிக்கை மற்ற இடங்களில் ஆக்கவேலை, உற்பத்தி பெருக்கம், கல்வி, கலைபயிற்சி இத்துறைகளில் அற்புதமாக வேலைசெய்தனர். கிராமமக்களின் ஆதரவுகளைத்தேடி வந்ததோடு விடுதலைப்படைக்கு வீரர்களை அனுப்பிவைக்கும் பொறுப்பையும் மேற்கொண்டு மிகத்தீவிரமாக பணியாற்றி வந்தார்கள் இளைஞர்கள். ஜப்பானியர்களுக்கு சீன ராணுவம் கூட ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. ஆனால் இளைஞர்களின் நடவடிக்கைகள் தான் தீராத மண்டையிடியாக இருந்தது. எட்டுவருடகாலமாக ஜப்பானியர்களை எதிர்த்து இளைஞர்கள் நடத்திய போராட்டம் சரித்திரப் பிரசித்தி பெற்றவை இந்த வீரப்பரம்பரையின் பிரதாபம் உலகத்தையே பிரமிக்கச்செய்தது.

# புதிய திருப்பம்

1945ம் வருடம் ஆகஸ்ட் மாதம் ஜப்பான் சரணாகதி அடைந்தது. யுத்தம் ஒரு முடிவுக்குவந்தது. கோமிண்டாங் சர்வாதிகார ஆட்சியை களைந்துவிட்டு, ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தவேண்டும். சீனாவின் சுதந்திரத்திற்கும் சுபிட்சத்திற்கும் மக்கள் ஆட்சியை உத்திரவாதம் வழங்கமுடியும். இவ்வாறு பொதுவுடமை வாதிகள் வற்புறுத்த ஆரம்பித்தார்கள். இந்த நிபந்தனைகளை எல்லாம் சியாங் — கே — சேக் நிராகரித்ததோடு மட்டுமல்ல பொதுவுடமை வாதிகளை ஒழித்துக் கட்டுவதே யுத்த பிற்காலத்திட்டத்தின் முதல் வேலையெனக் கருதினான். பொதுவுடமை வாதிகளின் பிடிப்பிலிருந்து பிரதேசங்களைத் தாக்கவும் தகர்க்கவும் தனது துருப்புகளை ஏவினான். கோமிண்டாங் ஆட்சியின் மிருகத்தனமான நடவடிக்கைகளும், மிலேச்சத்தனமான போக்குகளும், மக்களிடம் பெரும் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் கிளப்பியது. மக்களின்வெறுப்பு முறுகிப்பெருகியது. மக்கள் சமாதானத்தை விரும்பினார்கள். ஆனால் சியாங் — கே — சேக் ரத்தவெறிபிடித்து அலைய ஆரம்பித்தான்.

சர்வகலாசாலை மாணவர்களும் மற்ற ஸ்தாபனத்தார்களும் ஒன்றுபட்ட ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் 1945 நவம்பரில் நடைபெற்றது. பொதுவுடமை வாதிகளின் சமாதானத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கோமிண்டாங் ஆட்சியை நிர்ப்பந்திக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். இதைச் சகிக்குமா அதிகார வெற்றிபிடித்த ஆட்சி. ராணுவத்தின்மூலம் மிஷின் துப்பாக்கி பிரயோகம் செய்தது. இதை ஆட்சேபித்து மறு

காளே இளேஞர் ஸ்தாபனங்கள் பொதுவேலே நிறுத்தத்தை தூண்டின. தாங்கள் ஏன் சமாதானதிட்டத்தை வற்புறுத்து கிரும் என்றபிரச்சனேயை மக்கள் அங்கிகரிக்கும் அள விற்கு ஆர்வத்துடன் பிரசாரம் செய்தார்கள். ஒவ்வொரு வீடாகச் சென்ருர்கள்; ஒவ்வொரு தொழிற்சாலேயையும் அணுகினுர்கள்; ஒவ்வொரு கிருமத்திற்கும் போனுர்கள். தங்கள் கொள்கையை விளக்க. இளேஞர்களது நியாயமான வாதம் மக்கள்மனதைக் கவர்ந்தது. கோமிண்டாங் ஆட்சி யின் தற்கொலே நடவடிக்கையை தேசமுழுவதுமே ஒன்று திரண்டு எதிர்க்க முன்வந்தது. எதிர்ப்பு உணர்ச்சி உச்ச நிலேயை எட்டியது. இந்த சூழ்நிலேயை இளேஞர்கள் திறம் படப் பயன் படுத்திக் கொண்டார்கள். இதே சமயத்தில் இளேஞர்களது நடவடிக்கைகளே மனிதத் தன்மையற்ற முறையில் அடக்கி ஒடுக்கிவிட சியாங்—கே—சேக் தனது முழு வலிமையையும் பிரயோகிக்க பின் வாங்கவில்லே.

வேலே நிறுத்தம்செய்த மாணவர்களே 1945ம் வருடம் டிசம்பர் மாதம் முதல் நாளன்று மிருகத்தனமாக தாக்கியது கோமிண்டாங் போலீஸ் படை. தாக்குதலிலிருந்து ஒரு மாணவர் கூட்டத்தை ஒரு ஆசிரியர் தப்புவித்தார். அவ்வளவு தான் உயிர்போகும்வரை அவர் அடித்து கொல்லப்பட்டார். காயம்பட்ட மாணவர்களுக்கு ஒரு மாணவி சிகிட்சைசெய்து கொண்டிருந்தாள், அவளேப் படுகாயப் படுத்தினுன் ஒரு சார்ஜண்ட். ஆனுல் அவளோ சாகவில்லே. பைனட்டால் மறுபடியும் இருமுறை குத்தினுன். குற்றுயிராளுள் குமரி. ஆஸ்பத்திரிக்கு தூக்கிச்சென்ருர்கள். படுதத படுக்கையில் இருந்து கொண்டே "மாணவர்களே ஒன்று படுங்கள்" என்று வழி நெடுக கோஷிக்க ஆரம்பித்தாள். ஆத்திர மடைந்த அந்தச் சண்டாளர்கள், கட்டிலே அப்படியே கீழே போட்டு அந்தமாணவிக்கு மரணச்சீட்டு கொடுத்தார்கள்.

சியாங்—கே—சேக்கின் படுகொலை படலம் மறுபடியும் ஆரம்பமாகியது. கோமிண்டாங் கைக்கூலிகள் சமாதானத்தை விரும்பவில்லை, விரும்பவும் மாட்டார்கள். இந்த துரோகிகளை முதலில் ஒழித்துக் கட்டினால்தான் சீனச் சமுதாயம் சுபிட்சமடைய முடியுமென்று முடிவுக்கு வந்தனர் சீனமக்கள். கோமிண்டாங் ஆட்சிக்கு முடிவு கட்டுவது தவிர்க்க முடியாததாயிற்று மக்களின் பொறுமையும் எல்லை தாண்டியது 1946ல் மறுபடியும் உள்நாட்டுப் போர்மூண்டது

அமெரிக்காவின் கைப் பொம்மையாக விளங்கி வந்த சியாங்—கே—சேக் மீண்டும் தனது அட்டூழியங்களையும், அடக்கு முறைகளையும் அவிழ்த்து விட்டான். சீனச் செஞ்சேனை, "மக்கள் விடுதலைப் படை" யாக பரிமாணித்தது. விடுதலைப் படையை இளைஞர் படையென்றே கூறிவிடலாம். அறுபது சதவிகிதம் இளைஞர்களே. சகலவகுப்பு இளைஞர்களும் பங்கு கொண்டார்கள். எண்ணற்ற வீராங்கனைகள் விடுதலைப் படையின் முன்னணிக்கு வந்தார்கள். சின்னஞ்சிறு சினர்களும் சீரியமுறையில் பங்கு எடுத்துக் கொண்டார்கள். பதிமூன்று வயதிலிருந்து பதினெட்டு வயதிற்குட்பட்ட "சிறுவர் படை" (Pioneer crops) புரிந்த மகத்தான சாதனைகளை யார் தான் மறக்க முடியும்.

## அன்புள்ள தந்தையே!

கடைசி பேச்சு மட்டு மல்ல இதுவே நான் உங்களுடன் பேசும் கடைசி பேச்சு யாரும் இருமுறை சாவது கிடையாது. ஆனால் ஒவ்வொருவரும் இறந்தே யாக வேண்டும். ஏன்? எதற்காக என்று ஒன்று அறியாமல் சாகிறார்கள் சிலர். வாழ்க்கையின் நோக்கம் பெருமை பொருந்திய சாவாக இருக்கவேண்டும். சீன மக்களது விடுதலைக்காக உயிர் விடுவதை கௌரமிக்க செயலாகக் கருதுகிறேன்.

தாங்கள் பெருமையுள்ள மகனைப் பெற்றதற்காக பாராட்டப்படுவீர்கள். எனக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்காக கௌரவிக்கப்படுவீர்கள். சீன மக்கள் தங்களை மறக்க மாட்டார்கள்.

தந்தையே! தங்கள் மீது அன்பில்லாமல் நான் வெளியேறவில்லை. ஆனால் நம் தாய் திருநாட்டை தங்களை விட பெரிதாக மதிக்கிறேன்.

தங்கள் மகன்
சு — சேன் — ஹான்.

இது பதினாறு வயது நிரம்பப் பெறாத ஒரு இளம் மாணவனின் கடிதம். கடிதத்தை எழுதி புத்தகத்தில் வைத்துவிட்டு 1948ல் ஒருவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினான். சிறுவர் படையில் சேர்ந்தான். பகைவர் முகாமை தனது விளையாட்டு மைதானமாகக் கருதினான். கடைசியில் தன்னையே பலி கொடுத்தான். இவனைப் போன்ற ஆயிர மாயிரம் பச்சிளங் குருத்துக்களின் குருதியைக் குடித்துக் கூத்தாடிவந்த சியாங் — கே — சேக்கின் கொடுங்கோல் ஆட்சியின் குரல்வளை 1949 அக்டோபரில் தலைதூக்கமுடியாமல் நெறிக்கப்பட்டது. சீனக் குடியரசு பிறந்தது. மக்கள் ஆட்சி மலர்ந்தது.

# இன்றைய நிலை

சீனாவில் இன்று இரண்டு பிரதான இளைஞர் கழகங்கள் இயங்கி வருகின்றன. ஒன்று, "சீன ஜனநாயக இளைஞர் சம்மேளனம்" (All China Federation of Democratic Youth) மற்றொன்று "சீன புது ஜனநாயக இளைஞர் கழகம்" China New Democratic Youth League) விடுதலைப்போர் ஆரம்பமாகியவுடன், "தேசிய விடுதலை இளைஞர் கழகத்" தை உயர்த்த வேண்டியதாயிற்று. விடுதலைப் பிரதேசங்களில் "புது ஜனநாயக கழகத்தை" பரீட்சார்த்தமாக நிறுவவேண்டுமென்று 1946 செப்டம்பரில் பொதுவுடமைக் கட்சியினர் தீர்மானித்தார்கள். இதற்கு முப்பது மாதங்களுக்குப்பின் 1949 ஏப்ரலில் அகில சீன இளைஞர் காங்கிரஸ் பீகிங்கில் நடைபெற்றது. இம் மகாநாடு முதலில் "ஜனநாயக கழக" த்தையும் மறுமாதம் "சீன ஜனநாயக இளைஞர் சம்மேளனத்" தையும் தோற்றுவித்தது.

சீன ஜனநாயக இளைஞர் சம்மேளனம், நிலப் பிரபுத்துவத்தையும், ஏகாதியத்தியத்தையும் எதிர்க்கும் இளைஞர்களது ஐக்கிய முன்னணி. இளந்தொழிலாளர்கள், விவசாயிகள், மத்தியதர வகுப்பு இளைஞர்கள், சிறுபான்மை இளைஞர்கள் மற்றும் சகலஜனநாயக இளைஞர்களும், சம்மேளன அணியில் ஒன்று திரண்டனர். இக்கழகத்தில் கிருஸ்த்துவ, முகமதிய இளைஞர் ஸ்தாபனங்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க முன்வந்தது ஆச்சரியப்படத்தக்கது. உதாரணமாக கிருஸ்த்துவர் இளைஞர் சங்கத்தையும் (Y. M. C. A.) கிருஸ்த்துவ யுவதிகளின் ஸ்தாபனத்தையும் (Y. W. C. A.) குறிப்பிடலாம். 1950 ஜூலை மாதத்தில் இக்கழக அங்கத்தினர்களின் எண்ணம் எழுபது லட்சத்தையும் தாண்டிவிட்டது.

புதிய ஜனநாயக இளைஞர்கழகம் முற்போக்கு இளைஞர்களின் ஐக்கிய முன்னணி. இது பொதுவுடமைக் கட்சியின் தலைமையிலுள்ளது. இதன் அங்கத்தினர்கள், மார்க்சிச — லெனினச தத்துவங்களையெல்லாம் முறையாக கற்றுகவேண்டும் தெளிந்தபிறகு அவைகளை மக்களுக்கு உணர்த்தவேண்டும். அரசாங்கத்தில் நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் பங்குகொண்டு அவைகளை வெற்றிகரமாக நிரைவேற்றுவதற்கு, மக்களை ஒன்று திரட்ட வேண்டும். இதுவே புதிய ஜனநாயக இளைஞர் கழகத்தின் நோக்கம்.

இன்றைய சீன இளைஞர் இயக்கத்தின் அடிப்படை வேலை வருங்காலச் சந்ததியர்களை சீனத்தின் புது வாழ்வுக்கு தயார் படுத்துவதேயாகும்.

விவசாயப் பண்ணைகளிலும், தொற்சாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், தெருக்களிலும், இளைஞர் கழத்தின் கிளைகள் நிச்சயமாக இருக்கும். புதிய ஜனநாயக இளைஞர் கழகத்தில் தாம் ஒரு அங்கத்தினன் என்றுகூறுவதை இன்று ஒவ்வொரு சீன இளைஞனும் பெரும் கௌரவமாகக் கருதுகிறான். இன்று புதிய ஜனநாயக இளைஞர் கழகத்தில் 30 லட்சம் அங்கத்தினகள் இருக்கிறார்கள். இவர்களில் 59.1 சதவிகிதத்தினர் கிராமத்தவர்கள், மாணவர்கள் 17.5 சதவிகிதம், 11.4 சதவிகிதத்தினர் நிர்வாக ஸ்தாபனத்தினர்கள், 9 சதவிகிதத்தினர் தொழிலாளர்கள், பாக்கியுள்ளவர்கள் இதரபிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

புது ஜனநாயக இளைஞர் கழகம் இப்பொழுது கல்வித்தொண்டில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. வருடத்திற்கு ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சி

கொடுத்து தேர்ச்சிபெறச் செய்யும் நிலமையில் ஒரு கல்லூரியை மத்திய கமிட்டி நடத்திவருகிறது. இதே போன்ற பல கல்வி நிலையங்களை மாகாணக்கமிட்டிகளும், பிரதேசக் கமிட்டிகளும் நடத்தி வருகின்றன. இவர்கள் கலைத்துரைகளையும் மறந்துவிடவில்லை. நாடகம், கலை இவைகளில் ஒரு மறுமலர்ச்சியைக் காண பல ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டுள்ளன

புதிய ஜனநாயக இளைஞர் கழகம் "சீன இளைஞன்" (Chinese Youth) என்ற பத்திரிகையையும் வெளியிட்டு வருகிறது. இதனுடன் "சீனச் சிறுவர் பயோனீர்கள்" China's Young Pioneers) என்ற பத்திரிகையும் வெளி வருகிறது. போராட்ட காலத்தில் தீரமிகுந்த வீரர்களாக விளங்கிவந்த இளைஞர்கள் இன்று ஆக்கவேலைகளில் அபாரமான ஆற்றலைக்காட்டி வருகிறார்கள். இவர்களது செயலாற்றும் திறமை புதிய சீனத்தை ஏன் புரட்சிகரமான சீனத்தை வெகுவேகமாக உருவாக்கி வருகிறது. இந்த வளர்ச்சி வல்லரசுகளுக்கு சிம்ம சொப்பனமாகி விட்டது.

பழைய சீனா மறைந்து விட்டது இன்றையசீனா; புதியசீனா இதுவரை பழமைப் பெருக்கு மட்டும் இலக்காகி வந்த சீனம் இன்றுபுதுமைக்கு எடுத்துக்காட்டாக, புரட்சிச் சீனாவாக கம்பீரமாக காட்சியளிக்கிறது. இப்பொழுது பெற்றுள்ள புதுவாழ்வை சீனம் சந்தர்ப்பத்தால் அடைந்துவிடவில்லை. முப்பது ஆண்டுகள் நடைபெற்ற போராட்டத்தின்முடிவு; புரட்சியின் பயன்; தலைவர்களது மேன்மைமிகுந்த கண்ணோட்டத்தின் பலன்; சலியாத உழைப்பின் ஊதியம்; சிந்தியரத்தத்தின் சித்தி; தீரமிகுந்த முயற்சியின் விளைவு; தன்னம்பிக்கையின் நிர்மாணம்; இளைஞர்களின் மகத்தான சாதனைகளின் சிருஷ்டியே இன்றைய சீனா.

112734

எமது அடுத்த வெளியீடு

"நிஷ்டை"

எழுதிய சிறு கதைகள்

# "புரட்சி எழுந்தது"

★ பிரபல எழுத்தாளர் மாயாவி அவர்களின் முன்னுரை

★ காதல் ஓவியர் முத்து அவர்களின் ஓவியம்

★ அழகிய இருவர்ண அட்டைப்படம்

★ புத்தக உலகிலே ஒரு புதுமை

விபரங்களுக்கு உடனே எழுதுங்கள்.

ராஜா பிரிண்டிங் ஒர்க்ஸ், இராஜபாளையம்—51.